**15-05-2019**

# பத்திரிக்கை செய்தி

**சென்னை மெட்ரோ இரயிலில் இதுவரை 3.81 கோடி பயணிகள் பயணம் செய்துள்ளனர்.**

சென்னை மெட்ரோ இரயில் தனது மெட்ரோ இரயில் சேவையை கடந்த **2015** ஆம் ஆண்டு ஜூன் 29 முதல் சென்னையில் துவங்கியது. இதுவரை சென்னையில் உள்ள மக்களுக்கும் மற்றும் அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் பணியாற்றுவர்களுக்கும் சென்னை மெட்ரோ இரயில் ஒரு நம்பகமான பாதுகாப்பான போக்குவரத்து வசதியை தந்து வருகிறது.

இதை தவிர்த்து இணைப்பு போக்குவரத்து வசதிகளும் வாகனம் நிறுத்துமிட வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. தற்போது சில மெட்ரோ நிலையங்களில் இயங்கிக்கொண்டு இருக்கும் ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி, சேவைகள் விரைவில் அனைத்து 32 மெட்ரோ நிலையங்களிலும் துவங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை மெட்ரோ இரயில் சேவைகளை துவங்கியதிலிருந்து நாளுக்கு நாள் பயணிகளின் எண்ணிக்கை சீராக அதிகரித்து வருகிறது

இதுவரை மொத்தம் **3,81,03,799** பயணிகள் மெட்ரோ இரயிலில் கடந்த 2015 ஜூன் 29ம் முதல் நேற்று (2019 மே 14ம் தேதி) வரை பயணித்துள்ளார்கள்.

**2015**, ஜூன் **29** முதல் **2019**, மே **14** வரை சென்னை மெட்ரோ இரயிலில் பயணம் செய்தவர்களின் விவரம் பின் வருமாறு;

| | |
|---|---|
| ஜூன் 2015 முதல் டிசம்பர் 2015 வரை | 26,33,890 |
| ஜனவரி 2016 முதல் டிசம்பர் 2016 வரை | 36,30,216 |
| ஜனவரி 2017 முதல் டிசம்பர் 2017 வரை | 73,99,282 |
| ஜனவரி 2018 முதல் டிசம்பர் 2018 வரை | 1,43,88,969 |
| **2019** ஜனவரி முதல் மே 14ம் தேதி வரை | 1,00,51,442 |
| மொத்தம் | **3,81,03,799** |

கடந்த 26-04-2019 அன்று, மொத்தம் **1,02,790** பயணிகள் மெட்ரோ இரயில் சேவையை பயன்படுத்தியுள்ளனர். இதே போல், கடந்த 06-05-2019 அன்று மொத்தம் 92,917 பயணிகளும், **10-05-2019** அன்று, மொத்தம் **95,119** பயணிகளும் பயணித்துள்ளனர்

**2019**, ஜனவரி **01**ம் தேதி முதல் மே **14** ம் தேதி வரை சென்னை மெட்ரோ இரயிலில் பயணம் செய்தவர்களின் விவரம் பின் வருமாறு;

| | |
|---|---|
| ஜனவரி **2019** | 17,36,744 |
| பிப்ரவரி **2019** | 23,61,287 |
| மார்ச் 2019 | 23,88,319 |
| ஏப்ரல் **2019** | 24,30,713 |
| 2019 மே **1** ம் தேதி முதல் **14**ம் தேதி வரை | 11,34,379 |
| மொத்தம் | 1,00,51,442 |

மெட்ரோ ரயில்கள் மற்றும் இரயில் நிலையங்களை பராமரிப்பதில் மிகுந்த ஒத்துழைப்பு நல்கிவரும் அனைத்து பயணிகளுக்கும் மனமார்ந்த நன்றிகளை சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் தெரிவித்துக்கொள்கிறது.

*******************